**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்**

**அசல் வழக்கு எண். 57/2021**

2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13ம் நாள் Indian Oaths Act–1969 பிரிவு – 6(2)ன் ஏற்பாட்டின்படி வாதி தரப்பு சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.
(சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).
நாள் : 13.09.2023
வா.சா.: PW – 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் என்ற மாரிக்கண்ணு | தந்தை பெயர் | : | சுப்பையா |
| கிராமம் | : | மாராயப்பட்டி | தாலுகா | : | இலுப்பூர் |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | 64 | தொழில் | : | விவசாயம் |

<u>முதல்விசாரணை</u>

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அத்துடன் வாதி தரப்பு சான்றாவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யப்படுகிறது.

1) தாவாச் சொத்திற்கு வாதி பெயரில் இலுப்பூர் மண்டல துணை வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட தூய சிட்டா உண்மைநகல் **(வா.சா.ஆ.1/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது,

2) தாவாச் சொத்திற்கு வாதி பெயரில் இலுப்பூர் மண்டல துணை வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட தூய அடங்கல் உண்மைநகல் **(வா.சா.ஆ.2/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது,

3) தாவாச்சொத்தில் உள்ள வீட்டிற்கு வாதி பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் (எண்ணிக்கை–10) அசல் **(வா.சா.ஆ.3/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது,

4) தாவாச் சொத்தை வாதி அனுபோகம் செய்து வருகிறார் என்பதற்கான கிராம நிர்வாக அலுவலர் 27.08.2008ல் வழங்கிய சான்று அசல் **(வா.சா.ஆ.4/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது,

5) தாவாச் சொத்தில் இருந்த வீட்டை 4, 5 பிரதிவாதிகள் இடித்து விட்டது சம்மந்தமாக வாதி திருக்கோகர்ணம் காவல் துறையில் கொடுத்த புகாருக்கான மனு ரசீது அசல் **(வா.சா.ஆ.5/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) வாதி காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு கொடுத்த புகார் மனு கை நகல் அஞ்சலக ரசீது அசல் **(வா.சா.ஆ.6/PW1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதற்கு பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. ஆட்சேபனைகள் இல்லை என்று கூறினார்.**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வாதியை குறுக்குவிசாரணை செய்வதற்காக இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

//sd/–மாரியப்பன் என்ற மாரிக்கண்ணு,
PW.1.

//sd//– எஸ்.அன்புதாசன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் அவர்கள்.